தினகரன்
ஜூலை 22, 2025 செவ்வாய்க்கிழமை

## தேசிய பாரா பென்சிங் போட்டி

# ஜிப்மர் ஊழியர்கள் பதக்கம் வென்று சாதனை

புதுச்சேரி, ஜூலை 22: இந்திய சக்கர நாற்காலி பென்சிங் கூட்டமைப்பு சார்பில் தேசிய பாரா பென்சிங் சாம்பியன்ஷிப் போட்டி கடந்த ஜூலை 4, 5 தேதிகளில் சென்னையில் நடந்தது. இதில் புதுச்சேரிசார்பாக ஜிப்மரில் பணிபுரியும் எம்டிஎஸ் ஊழியர்கள் கோவிந்தராஜன், சிவக்குமார், மூத்த செவிலிய அலுவலர் பாலச்சந்தர் ஆகியோர் சக்கர நாற்காலி வாள்வீச்சு பிரிவில் கலந்துகொண்டு வெண்கல பதக்கத்தை வென்றனர். இந்திய சக்கர நாற்காலி பென்சிங் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு சக்கர நாற்காலி பென்சிங் கூட்டமைப்பு இணைந்து நடத்திய இப்போட்டி உலக பாரா பென்சிங் விதிமுறைகளை கடைபிடித்து பல்வேறு பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்டது. ஜிப்மரை சேர்ந்த மூவரும் இதில் பங்குபெற்று வெற்றி பெற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற ஜிப்மர் ஊழியர்களை இயக்குனர் வீர் சிங் நேகி பாராட்டினார்.



தேசிய பாரா பென்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற ஜிப்மர் ஊழியர்களை இயக்குநர் வீர் சிங் நேகி பாராட்டினார்.